உ

கடவுள் துணை

# ஞானவுடற்கூறு.

பொதிகைமலை சிவகிர்த்தனையும்

பார்த்தசாரதிப்பெருமாள் நடபாய்ச்சிந்தும்

இம்மூன்றும் அடங்கியிருக்கின்றன.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதறாஸ், என். சி.

கோன்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

1914

17-18 காவத்திப்பப முதலிவீதி மதறாஸ் என், சி.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோள்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும், அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்டுகார்டு அளவுள்ளவிநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோள்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

# ஞானவுடற்கூறு.

---

## வெண்பா.

சுழியறியார்க்கென்ன நலஞ்சுகமறியார்க்கென்னகுரு
வழியறியார்க் கென்னவெய்தும்-வாறுகாண்
சுழியறியாமூல மறிந்தவ்வழியில் முத்திபடையார்க்கு
நமன்கால மவர்க்கேமரணங் காண்.

சாந்துமிட்டு ஜவ்வாதுமிட்டு நாளை
சந்தனம்பூசிநீ சாகப்போறாய்-உன்னை
சேர்ந்தபந்துக்கள் ஸீமத்திற்கொண்டுபோய்
செந்தணலாக்குவார் மானிடமே.
சாந்துமிட்டு ஜவ்வாதுமிட்டு

அஞ்சடிவெட்டி அடிபடைபோட்டு
அதற்குமேல் வீடுகட்டுகிறாய்-நீ
கட்டினவீட்டுக்கு காரணமாரணங்
கண்டதுண்டோசொல்லு மானிடமே.

சாந்துமிட்டு ஜவ்வாதுமிட்டு

எட்டுகட்டுவீடு கட்டுகிறாய்நீ
எங்கெங்கேதனத்தைப் புதைக்கிறாய்நீ
புதைத்ததனத்தை யின்னாருக்கென்று
பிரித்துச்சொல்லடா மானிடமே.

சாந்துமிட்டு ஜவ்வாதுமிட்டு

மட்டக்குதிரைமே லேறிக்கொண்டுநீ
பட்டணமெங்கும் சுற்றுகிறாய்
பொட்டெனவேஎம னோலைவந்தால்
புறப்பட்டுபோவாயே மானிடமே.

சாந்துமிட்டு ஜவ்வாதுமிட்டு

கிணத்தைச்சுற்றிப்பில் முளைத்ததுபோல்
கிளைக்குதேநீர் செய்தபாவம்நீ
செய்தபாவம் துலைக்கவேதான்
விஷ்ணுவைதேடடா மானிடமே.

சாந்துமிட்டு ஜவ்வாதுமிட்டு

பருப்போடம்பர மானந்தத்தோடும்
பசும்நெய்போட்டுநீ உண்ணுகிறாய்நீ
நெருப்பிலேபோட்டு கொளித்திவிட்டால்
நீராய்போவாயே மானிடமே.

சாந்துமிட்டு ஜவ்வாதுமிட்டு

சூத்திரத்தாலே பணங் காசைதேடிநீ
மூத்திரக்குழியில் மாளுகிறாய் நாளை
சூஸ்திரத்தாரையே கண்டுவிட்டால்
சொல்லாமல்போவாயே மானிடமே.

சாந்துமிட்டு ஜவ்வாதுமிட்டு

அரியாதவஸ்துவை அரியலாமென்றார்
அரினையபலனை அரியுமென்றார்
மதுருநெல்லூர் சாமிகளெல்லோரும்
வெறுத்துசொல்வாயே மானிடமே.

சாந்துமிட்டு ஜவ்வாதுமிட்டு

ஞானவுடற்கூறு முற்றுப்பெற்றது

## பொதிகைமலை சிவகீர்த்தனை.

இராகம்-இந்துஸ்தான்,

பல்லவி.

பிச்சையிடாநின்ற பெலதமடையர்கள்
கச்சேரிக்கேகொடுப்பார்-சிவனே பிச்சை

அநுபல்லவி.

உச்சிதமாநர ஜென்மம்சடைத்தேற
இச்சைவையாற்குல அச்சுதாகேழ்க்கினும் பிச்சை

சரணங்கள.

இந்திருதிஜாலப் பிரசங்கங்கள்செய்தாலவர்
சிந்தைகறையார்கள் சிவனே
தந்தைதாயார்பசி யாலேவிரந்தாலும்
தாயார்டம்பத்திஞ லழியும்பாவி
பிச்சையிடாநின்றபேதை

வெள்ளைசள்ளையாக வஸ்திரமுடுத்திஞல்
நல்லமுதலியென்பார் சிவனே
அல்லையறுத்த அடியார்களைக்கண்டால்
தள்ளுதள்ளுதெருவில் நீல்லுமென்றபாவி
பிச்சையிடாநின்றபேதை

ஆஸ்திகுலமென்று பேசும்நகம்பர்தன்
நேசம்யினிவேண்டேன் சிவனே
சாஸ்திதாசர்களை பூசித்தவன்வார
வாசிவீரமுனி யீசானந்தங்கேழ்க்க
பிச்சையிடாநின்றபேதை

பொதிகைமலை சிவகீர்த்தனே,
முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# திருவல்லிக்கேணிபார்த்தசாரதிப்பெருமாள்

## பங்களா உற்சவச்சிந்து.

வெண்பா.

அற்புதமாங்காவுக்குள் அன்பனுள்வார்செட்டி [ம்
செப்பரியபங்களாவும் செய்துவைத்த - மெய்ப்பொருளா
பார்த்தனிடசாரதியிப் பவனிவருமானந்தம்
நேத்திரத்தால் காணும் நின்று.

இராகம்-இந்துஸ்தான்

பல்லவி.

காவித்திருபங்களா அத்தாவில்வசந்தமாக
காரணபார்த்தசாரதி வரும்பவனி - காவில்

காவித்தென்னஞ்சோலை வாழைக்கமுகம்சாலை
கனிபலா அகில்புன்னை விருஷத்தில்கூவிக்
குயில்கள்கொஞ்சி ஆடிமயில்கள்மிஞ்சநாடி
கெம்பீரத்துடன் வாராரே காவித்திரு

சித்திரவிச்சித்திரதேவா மகிழ்கின்ற
சிப்பிகள்சமைத்ததோர் மாளிகை
லஸ்தர்குளோபுடன் சாருலோபுகள்தொங்க
லட்சணமானதோர்படங்களும்தூக்கி காவித்திரு

அண்டமளாவிய அரும்பச்சைபந்தலிலே
அனேகவாழைமரம் தூக்கியே
கண்கொண்டகாக்ஷியாய் கதிர்சுடர்தீபங்கள்
காட்சியிதுவோ காட்சிகாணவே காவித்திரு

இருபுரமுந்தடாகம் மிரங்கும்நடபாயி
அல்லிசெந்தாமரை பூர்க்கவும்
கரும்வண்டுதும்பிரண்டு விரும்பியதேனையுண்டு
தித்துச்சுழன்று கீதமபாடவும் காவித்திரு

மேளவாத்தியமுழங்க மேலோர்கண்டு
புகழவெற்றிவிமானத்தில் ஏகிட
ஆலவட்டங்குடைசௌரி வெண்சாமரைகள்
அன்பாய்பந்நீர்கொண்டு வீசவும் காவித்திரு

வேதவேதியர் வேதம்புரியவும்
விஷ்ணுநாமம் பக்தர்பாடவும்
பேதகமில்லாததெய்வ ரம்பையர்போலுமே
பெண்கள்நடித்து நின்றாடவும் காவித்திரு

அதிரவெடிகளும் பருசுபாணங்களும்
அநேகவிதகம்ப பாணமும்மதியென
பிர்மிக்சமத் தாப்புசோதியால்
மண்டலமெங்கும் பிரகாசிக்க காவித்திரு

தாமிஷமில்லாமல் சர்வோத்திரட்களும்
சரணுசெதியென்று துதிக்கவே
சுவாம்பிள்ளைசிஷன் யானுந்துதித்திட
சனுர்த்தனளை யாளவேணுமே காவித்திரு

திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப்பெருமாள்
பங்களாஉற்சவச்சிந்து முற்றிற்று.

---